# ALL INDIA FORUM FOR RIGHT TO EDUCATION
## अखिल भारत शिक्षा अधिकार मंच

Secretariat: 306, Pleasant Apartments, Bazarghat, Hyderabad 500 004
aifrte.secretariat@gmail.com www.aifrte.in

सबको शिक्षा एक समान, मांग रहा है हिंदोस्तान!



*Board of Advisors*
Prof. R.K. Agnihotri, Rajasthan
Formerly Dept. of Linguistics, Delhi University

Dr. V. Vasanthi Devi, Tamil Nadu
Formerly Vice Chancellor, M. S. University; Chairperson, Institute of Human Rights Education, Madurai

Dr. Hiren Gohain, Assam
Poet & Literary Critic, Guwahati

Prof. Sudarshan Iyengar, Gujarat
Formerly Vice Chancellor, Gujarat Vidyapeeth

Sri Devanooru Mahadeva, Karnataka
Writer & Activist for Social Justice, Bangalore

Sri Kedarnath Pandey, Bihar
President, Bihar Madhaymik Shikshak Sangh

Dr. G. G. Parikh, Maharashtra
Yusuf Meharally Centre, Mumbai

Prof. N. D. Patil, Maharashtra
Educationist and Peasant Leader, Kolhapur

Prof. Prabhat Patnaik, Haryana
Economist & Professor Emeritus, JNU

Prof. Ram Puniyani, Maharashtra
Writer & All India Secular Forum, Mumbai

Sri S. P. Shukla, Uttarakhand
Formerly Commerce Secretary, Govt. of India

Prof. Jagmohan Singh, Punjab
Senior Civil Liberties Activist, Ludhiana

Sri Shatrughan Pd. Singh, Bihar
Gen. Secy., Bihar Madhaymik Shikshak Sangh

Prof. Rooprekha Verma, Uttar Pradesh
Formerly Vice Chancellor, Lucknow University

*Presidium*
Prof. Jagmohan Singh, Punjab
Chairperson, AIFRTE

Prof. Wasi Ahmed, Bihar
Former Joint Secretary, AIFUCTO; Patna

Sri Prabhakar Arade, Maharashtra
President, AIFETO; Kolhapur

Prof. G. Haragopal, Telangana
Acting Chairperson, AIFRTE; Visiting Professor, NLSIU, Bengaluru

Sri Ramesh Patnaik, Andhra Pradesh
Convener, Andhra Pradesh Save Education Committee

Prof. Madhu Prasad, Delhi
Formerly Dept. of Philosophy, Zakir Husain Delhi College, Delhi University

Prof. K. Chakradhar Rao, Telangana
Formerly Dept. of Economics, Osmania University

Prof. Anil Sadgopal, Madhya Pradesh
Formerly Dean, Faculty of Education, Delhi University; Bhopal

Prof. K. M. Shrimali, Delhi
Formerly Dept. of History, Delhi University

Dr. Anand Teltumbde, Goa
Writer & Civil Liberties Activist, Senior Professor, Goa Institute of Management

Prof. Zhatsu Terhuja, Nagaland
Formerly Dept. of Education, Patkai Christain College, Dimapur


20 March 2020

ALL INDIA FORUM FOR RIGHT TO EDUCATION (AIFRTE)
Statement on SC's rejection of anticipatory bail to Prof. Anand Teltumbde
TAMIL TRANSLATION

பேராசிரியர் ஆனந்த் டெல்டும்டேவுக்கு முன் எதிர்பார்ப்புப் பிணை விடுவிப்பு ஆணை வழங்க உச்சநீதிமன்றம் மறுத்திருப்பது தொடர்பாக கல்வி உரிமைக்கான அகில இந்திய கூட்டமைப்பு (AIFRTE) அறிக்கை:

## கல்வி உரிமைக்கான அகில இந்திய கூட்டமைப்பு (AIFRTE)

பேராசிரியர் ஆனந்த் டெல்டும்டேவுக்கு, தான் கைது செய்யப்படாமல் இருக்கக் கோரும் முன் எதிர்பார்ப்புப் பிணை விடுவிப்பு ஆணை வழங்க உச்சநீதி மன்றம் மறுத்து விட்டது.இது குறித்துக் கல்வி உரிமைக்கான அகில இந்திய கூட்டமைப்பு (AIFRTE) விடுத்துள்ள அறிக்கை: :

பேராசிரியர் ஆனந்த் டெல்டும்டே,காவல் துறை தன்னைக் கைது செய்யாமல் இருக்கக் கோரி தாக்கல் செய்த முன் எதிர்பார்ப்புப் பிணை விடுவிப்பு ஆணை வழங்க உச்சநீதிமன்றம் அனுமதி மறுத்து விட்டது குறித்துக் கல்வி உரிமைக்கான அகில இந்திய மேடை அதிர்ச்சி அடைந்திருக்கிறது.மிக ஆழ்ந்த ஏமாற்றத்திற்கும் ஆளாகியுள்ளது.ஆனந்த் அவர்கள், கல்வி உரிமைக்கான அகில இந்திய கூட்டமைப்பு (AIFRTE) அமைப்பின் தலைமைக்குழு உறுப்பினர். அகமதாபாத் இந்திய மேலாண்மைக் கழகத்தின் மேனாள் மாணவர்.இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தின் பேராசிரியர்.தற்போது,கோவா மேலாண்மைக் கல்வி நிலையத்தின் பெரும் தரவுப் பகுத்தாய்வுத் துறையின் முதுநிலைப் பேராசிரியர் மற்றும் தலைவர்.மேலும், பேராசிரியர் டெல்டும்டே மிக நன்கறியப்பட்ட ஓர் ஆய்வறிஞர்.சாதி-வர்க்கம்-பொதுக் கொள்கைகள் சார்ந்த பிரச்சினைகளில் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டு வருபவர்.முன்னணி அறிவு ஜீவி.ஜனநாயக,கல்வி உரிமைகள் செயற்பாட்டாளர்.கொடூரமான சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்(UAPA) கீழ் அவருக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு, தடை செய்யப்பட்டுள்ள மாவோயிஸ்ட் அமைப்புகளுடன் அவர் தொடர்புகள் வைத்திருந்தார் எனக் குற்றம் சாட்டியிருக்கிறது.

பீமா-கோரேகான் என்ற இடத்தில் மராட்டிய பேஷ்வாவின் படைகளை எதிர்த்து நடைபெற்ற போரின் 200-ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் 2018-ஆம் ஆண்டு தலித் அமைப்புகள் வலிமை மிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தின.அப்போது எதிர்பாராமல் அங்கு வன்முறை வெடித்தது.மத்தியில் பி,ஜே.பி.-ஆர்.எஸ்.எஸ். தலைமையில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு,மேற்கண்ட நிகழ்வைப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டின் முன்னணி குடிமை உரிமைச் செயற்பாட்டாளர்கள்,மனித உரிமைகள் செயற்பாட் டாளர்களைக் குறி வைத்துத் தாக்குதல்களைத் தொடுத்து வருகிறது.




Contacts:
Organising Secretary: Dr. Vikas Gupta, Delhi; Email: aifrte.secretariat@gmail.com
Treasurer: Dr. M. Gangadhar, Warangal; Mob: 09440414073; Email: manchalagangadhar@gmail.com
Secretariat Member: Sh. Lokesh Malti Prakash, Bhopal; Mob: 09407549240 & 07024148240; Email: lokeshmaltiprakash@gmail.com
Convenor, Communication Committee: Dr. Neeta Chaubey, Benaras; Mob: 09415372123 & 06388546183; Email: drneetachaubey@gmail.com

மேற்கண்ட பீமா-கோரேகான் போர் நினைவிடத்தில் 2018-ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று,பெருந்திரளாகக் கூடியிருந்த மக்களின் மீதுகற்களை வீசியும்,அரங்குகளை எரித்தும், பங்கேற்பாளர்களை அடித்து உதைத்தும் பிற்போக்கு சக்திகள் கொடுந்தாக்குதல்களைத் தொடுத்தன.இப்போதுள்ள நிலையில்,நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிகழ்வுகளின் போது சாதாரணமாகப் பார்க்க முடிவதைப் போல்,அங்கும் காவல்துறை அனைத்தையும் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றது.சட்டவிரோதமான அந்த வன்முறைத் தாக்குதலில், நிர்வாக அமைப்பின் பங்கேற்பும் இருந்தது என்பதை அது தெளிவாக நிறுவிக் காட்டியது. என்ன நடக்கப் போகிறதென்பதை சிறிதும் எதிர்பார்த்திராத தலித் மக்களைக் காவிக் கொடிகளை ஏந்தியவர்கள் ஏக்போட் மற்றும் பிடே-வின் பெயர்களால் முழக்கங்களை எழுப்பிக் கொண்டு துரத்தித் துரத்தித் தாக்கினார்கள்.மக்களை அவர்கள் தாக்கி விரட்டியடிப்பதை வாட்ஸ் ஆப் காணொளிக் காட்சிகள் காட்டுகின்றன.பலர் படுகாயம் அடைந்தனர். அவர்களு டைய வாகனங்கள் நாசமாக்கப்பட்டன.காட்சி அரங்குகள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

பிணையில் வெளியே வந்திருந்த மிலிந்த் ஏக்போட்,சமஸ்தா ஹிந்துத்துவ அகாடி அமைப்பின் தலைவர்.ஷிவ் சத்திரபதி பிரதிஸ்தான் அமைப்பின் சாம்பாஜி பிடே-இவர்கள் இருவரும் முன்னணி முகவர்களாக இருந்து ஆத்திரமூட்டியவர்கள்.இவர்களுக்கு எதிராக சட்ட பூர்வ நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.முந்தைய தினத்தன்று,’எல்கார் பரிஷத்’ என்ற நிகழ்வு பூனாவில் நடைபெற்றிருந்தது.அதில் உரையாற்றிய பேச்சாளர்களால் தான் பீமா-கோரேகானில் வன்முறை தூண்டப்பட்டது என்று பூனா காவல்துறை,ஒரு ‘சதி திட்டமிடப்பட்ட’தாக ஜோடனை செய்தது.இத்தனைக்கும் எல்கார் பரிஷத் நிகழ்வு நீதியரசர்கள் கோல்சே-பட்டீல் மற்றும் பி.பி.சாவந்த் ஆகியோரால் கூட்டப்பட்டிருந்தது. ஆனால்,அந்த நிகழ்வின் அமைப்பாளர்கள்,தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் அமைப்பு களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பவர்கள் என்பதற்குத் தங்களிடம் ‘ஆதாரங்கள்’ இருப்ப தாகக் காவல்துறை உரிமை கோரியுள்ளது.இதன் தொடர்ச்சியாக, ஜுன்-2018 முதல்,நாட்டின் மிக நன்கறியப்பட்ட குடிமை உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைச் செயல் பாட்டு வழக்கறிஞர்கள் உள்படப் பலர் ‘மாவோயிஸ்ட் அனுதாபிகள்’ என முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர்.அவர்கள் இன்றளவும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பிப்ரவரி, 2019-இல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில்,கூடுதலாகச் சேர்க்கப்பட்ட துணைக் குற்றப்பத்திரிகையில்,பேராசிரியர் ஆனந்த் டெல்டும்டேயின் பெயர் இணைக்கப்பட்டது.இத்தனைக்கும் அவர் எல்கார் பரிஷத் நிகழ்வில் பங்கேற்கக் கூட இல்லை.அவருக்கு எதிராகக் காவல்துறையிடம் இருக்கும் ‘ஆதாரம்’ என்பது,ஏற்கெனவே கைது செய்யபட்டிருக்கும் ஒருவரின் கணினியில் காணப்பட்டதாகக் கூறப்படும் ஒரு கடிதம் மட்டுமே.

அந்தக் கணினியின் வன்பொருள் குறுவட்டைப் பகுப்பாய்வு செய்த சைபர் தடயவியல் ஆய்வு என்ன காட்டுகிறது எனில்,அதில் மோசடியான பொருள் இருப்பதையே.அது,அந்தக் கணினியை நெடுந்தூரத்திலிருந்து அணுக முடிவதை அனுமதிப்பதாக இருக்கிறது.இது, கண்டறியப்பட்டிருப்பதாகக் கூறப்படும் ‘ஆதாரம்’ பற்றி மிகத்தீவிர ஐயங்களை உருவாக்குவதாக இருக்கிறது.இப்போது தேசியப் புலனாய்வு அமைப்புக்காக (NIA) நீதிமன்றத்தில் ஆஜராகும் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, பேரா.டெல்டும்டேவின் சிறைக்காவல் விசாரணை, ‘மிக உயர்ந்தபட்ச’ அத்தியாவசியத் தேவை என்பதாக உரிமை கோருகிறார்.

இந்த வழக்கு இவரிடம் கடந்த மாதம்தான் ஒப்படைக்கப் பட்டுள்ளது.புதிய மகாராஷ்டிர அரசு,மனித உரிமைகள் வழக்கறிஞர்கள்,மற்றும் குடிமை உரிமைகள் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் மீது அவர்களுக்கு எதிராகக் காவல்துறை தொடுத்துள்ள வழக்கு மீளாய்வு செய்யப்படும் என உறுதியளித்துள்ளது.

இங்கு ,இன்றைய முன்வரிசைத் தொழில்நுட்பங்கள் சார்ந்த தொழில் நுணுக்கங்களில் பேரா.டெல்டும்டே வின் சாதனைகள் மிகுந்த அழுத்தம் தந்து வலியுறுத்தப்பட வேண்டியவை.இந்தியாவில் தகவல் தொழில் நுட்பத்தின் மேம்பட்ட வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்திய இருபது உச்சநிலை தொழில் நுணுக்க வல்லுநர்களுள் இவரும் ஒருவராக மதிப்பிடப்படுகிறார்.DATA QUEST நிறுவமைப்பின் மூலமாகத் தொடர்ச்சியாக மூன்றாண்டு களாக அவர் இந்தத் தாக்கத்தை ஏற்படுத்தினார்.ஏராளமான கவுரவமிக்க விருதுகளை இவர் பெற்றிருக்கிறார்.எண்ணெய்-எரிவாயுத் துறையில் புத்தாக்கத் திறன் மிக்க அமைப்பு முறை களை எல்லா செயல்பாட்டுப் பரப்புகளிலும் கருதுகோள் உருவாக்கம்,வடிவமைத்தல், நடை முறைப்படுத்துதல் –ஆகியவற்றில் மூன்று தலைமுறைகளுக்கும் மேற்பட்ட காலகட்டத்தில் நிரூபணமான சாதனைப் பதிவுகளைக் கொண்டிருப்பவர்.உடைமை நிறுவனத்தின் முதன்மைச் செயல் நிர்வாக அலுவலராகவும், அதன் துணை நிறுவனங்களின் நிர்வாகக்குழு உறுப்பினராக வும் தொடர்ந்து 7 ஆண்டுகள் பணியாற்றியவர்.பார்ச்சூன் 500 (BPCL) நிறுவனத்தின் மூல உத்தி,செயல் நிர்வாக,தகவல் தொழில் நுட்ப உத்தி மற்றும் பொது விற்பனைக் குழுக்களின் உறுப்பினராக 12 ஆண்டுகள் பணியாற்றியவர்.27-க்கு மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதி யிருக்கிறார்.புகழ்மிக்க முன்னணிப் புத்தக ஆசிரியர்களால் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்களுக்கு 50 அத்தியாயங்களை வழங்கியிருக்கிறார்.செய்தித்தாள்கள்,பத்திரிகைகள்,பிரபலஆய்விதழ் கள் ஆகியவற்றில் 20-க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். அந்த இதழ்களின் நிர்வாக அமைப்புகளில் முன்னணி நடுவராகவும்,உறுப்பினராகவும் இருப்பவர்.இவையல்லாமல்,சர்வதேசக் கருத்தரங்குகள், மாநாடுகளில் பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து உரையாற்றியவர்.இந்தியாவிலும்,அயல்நாடுகளிலும் உள்ள முன்னனி நிறுவனங்களில் வருகை தரு பேராசிரியராகவும் பங்களித்து வருபவர்.

மகாராஷ்டிராவின் யாவத்மால் மாவட்டத்தில், நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பம் ஒன்றில் பிறந்தவர் ஆனந்த் டெல்டும்டே.தன்னிகரற்ற விதத்தில் தொழில்ரீதியான வெற்றி களைக் குவித்தவராக விளங்கும் அதே சமயத்தில்,அடித்தட்டுகளில் உள்ள, ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களில் தொடர்ந்து தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர்;அவற்றின்பால் ஆழ்ந்த பரிவுமிக்க சிறப்பு முன்னுரிமையளிப்பவர்.முன்னணி குடியுரிமைகள் செயற்பாட்டாளர் என்ற முறையிலும், சமூக அநீதிகள்-ஒடுக்குமுறைகளின் மூல ஊற்றுக்கண்கள் எவை என்பது தொடர்பான கருத்தியல் கொள்கையாளர் என்ற முறையிலும் மேற்கண்ட அம்சங்களில் ஈடுபாடு மிக்கவர் .பாபாசாஹேப் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் பேத்தியைத் திருமணம் செய்திருக்கிறார் இவர்.

கல்வி உரிமைக்கான அகில இந்திய மேடையின் தலைமைக்குழுவின் முன்னணி உறுப்பினராகக் கடந்த பத்து ஆண்டுகளாக அவர் ஆற்றி வரும் வகிபாகம், அமைப்புக்கு மாபெரும் மதிப்பு மிக்கதாக அமைந்துள்ளது.தாய்மொழி வழியே கல்வி வழங்கும் இலவச, கட்டாயப் பொதுப்பள்ளி அமைப்பு முறை வேண்டுமென்ற இலட்சியத்துக்காகப் போராடுவதற்குப் பெரும் எண்ணிக்கையில் செயற்பாட்டாளர்களை ஈர்த்தவர்.கல்வியில் சமத்துவத்தையும்,சமூக நீதியையும் உறுதிப்படுத்த இது ஒன்றுதான் வழியாகும்.

கல்வி உரிமைக்கான அகில இந்திய மேடை, இந்தியாவின் இருபத்திரண்டு மாநிலங்களில் அமைந்துள்ள எண்பதுக்கும் மேற்பட்ட தனது உறுப்பு அமைப்புகளையும்,நாடு முழுவதிலு முள்ள ஏனைய ஜனநாயக அமைப்புகளையும்,தனி நபர்களையும் இந்தப் பிரச்சினை தொடர்பான தமது எதிர்ப்பினைப் பதிவு செய்யுமாறு அறைகூவி அழைக்கிறது.இந்தக் கண்மூடித்தனமான ஜனநாயக விரோத நடவடிக்கையை நாம் அனைவரும் எதிர்த்து நிற்க வேண்டும்.சர்வாதிகாரத் தன்மை வாய்ந்த இந்த சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கோரி வலியுறுத்த வேண்டும்.குடிமக்களின் அரசியல் சட்டபூர்வமான உரிமைகள் மூலம் அவர்களுக்கு  வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்புரிமைகளை மீறி தாக்குதல்  நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தை இந்தச் சட்டம்  அனுமதிக்கிறது. இந்தச்சட்டத்தைப் பயன்படுத்தி பேரா.டெல்டும்டேவை இவ்வாறு சித்திரவதை செய்வதற்கு எதிராகப் பெருந்திரளான,தொடர்ச்சியான பொதுமக்கள் விழிப்புணர்வுப் பரப்புரையைக் கட்டவிழ்த்து விடுவதென கல்வி உரிமைக்கான அகில இந்திய கூட்டமைப்பு முடிவு செய்திருக்கிறது.

-- தலைமைக் குழு, கல்வி உரிமைக்கான அகில இந்தியகூட்டமைப்பு

Prof. Jagmohan Singh (Chairperson, AIFRTE)        Dr. Vikas Gupta (Organizing Secretary, AIFRTE)